1990 மார்ச் 21]

களிலும், அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் கூட அப்படிப்பட்ட மரம் நடு விழாக்களை நடத்த வேண்டும் என்பது இந்த அரசினுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்.

(அ) இலங்கையிலிருந்து வந்து ஒரிசா மாநிலத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல்வேறு தின இதழ்களில் இலங்கையிலிருந்து வருகை தந்திருக்கின்ற தமிழ் அகதிகள் ஒரிஸ்ஸாவிலே கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டு அவர்கள் அங்கே இருப்பது ஒரு பிரச்சினையாக ஆக்கப்பட்டு அதன் காரணமாக பாதிக்கப்பட்ட அந்தத் தமிழர்களை லாரிகளிலே ஏற்றி அவர்களை வெளியேற்றுகின்ற முயற்சி நடைபெறுவதாக இன்றைக்குப் பத்திரிகைகளில் செய்தி வந்து இருக்கிறது. இந்திய அரசாங்கத்தினுடைய துணையோடு இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்த கப்பலில் அங்கேயிருந்து அழைத்து வரப்பட்ட அந்தத் தமிழ் அகதிகள் என்ன காரணத்தாலோ ஒரிஸ்ஸாவிற்குப் போய் விட்டார்கள் : ஏன் போனார்கள் எதற்காகப் போனார்கள் எப்படி அனுப்பினார்கள் என்கின்ற விவாதத்தை எல்லாம் வேறு ஒரு நேரத்திலே, விவாதிக்கின்ற நேரத்திலே நான் பேசுகிறேன். ஆனால் ஒன்றை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புவது, பாதிக்கப்பட்ட தமிழர்கள், போராளிகளா, இல்லையா என்பதைவிட பாதிக்கப்பட்டு அகதிகளாக வாழ்வு தேடி வந்து கொண்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை, காப்பாற்றுவதை நம்முடைய கடமையாக நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் ஒரிஸ்ஸாவிற்கு அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை தமிழ்ப் பகுதிகளிலே இங்கே தமிழகத்திலே அவர்களைக் குடியேற்றி அவர்களை வாழ வைக்கின்ற அளவிற்கு நீங்கள் முன்வரவேண்டுமென்று நான் பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்வேன். அவர்கள் போராளிகள் அல்ல என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே தாய்மார்கள் இருக்கிறார்கள். குழந்தைகள் இருக்கிறார்கள். போராளிகள் இல்லை என்று வேறு, மத்திய அரசாங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, எப்படியோ கப்பலிலே அவர்களை

நீங்கள் அனுப்பி விட்டீர்கள். நீங்கள் இங்கே ஏற்றுக் கொள்ள வில்லை என்றாலும் இப்போது இருக்கிற சூழ்நிலை, வேறு ஒரு மாநிலத்திலே நம்முடைய தமிழர்கள் தொல்லைக்கும், வேதனைக்கும் ஆளாகாத வகையில் அவர்களைத் தமிழகம் அரவணைத்தது என்ற ஒரு பெரிய வரலாற்றை உருவாக்குகின்ற பணியை நீங்கள் மேற்கொண்டு, அங்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்தத் தமிழர்களை தமிழகத்திலே ஏற்று அவர்களைக் காக்கின்ற அந்தப் பொறுப்பை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

10-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கூறியுள்ள இந்தப் பிரச்சினை சில ஏடுகளிலே வெளி வந்துள்ள ஒரு செய்தியைப் பற்றியது ஆகும். ஒரிசா மாநிலத்தில் தண்டகாரண்ய பகுதிக்கு அருகாமையிலே வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சார்ந்த அகதிகள் என்ற பெயரால் வந்துள்ள பெரும்பாலான போராளிகள்—அந்தக் குழுவினர்—அங்கே இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற வகையில் அந்த மாநிலத்திலேச் சில இயக்கங்கள் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டு இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தி எந்த அளவு உண்மையானது என்பதை ஒரிசா மாநில அரசுதான் அறிவிக்கவேண்டும் அல்லது இந்தியப் பேரரசு இது குறித்து அறிவிக்க வேண்டும். பத்திரிகையில் வந்த செய்தியை மாத்திரம் வைத்துக்கொண்டு, இந்த மாநில அரசு எந்தக் கருத்தினையும் எடுத்துக் கூற இயலாத நிலையிலே உள்ளது. பொதுவாக வந்த கப்பல்களிலுள்ளவர்கள் பெரும்பாலானவர்கள் போராளிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால்தான் அந்தக் கப்பல்களை மாநில அரசே இங்கே வரவேண்டாம், இங்கே அனுப்ப வேண்டாம் என்ற வேண்டுகோளை மத்திய அரசுக்குத் தெரிவித்தது. மத்திய அரசும் அதை ஏற்றுக்கொண்டது. தமிழர்களை, இலங்கையிலிருந்து வருகின்றவர்களைக் காப்பாற்றுகின்ற, ஆதரிக்கின்ற பொறுப்பு தமிழ் நாட்டு மக்களுக்கு உண்டு என்பதற்கு அடையாளமாகத்தான் 1983-ஆம் ஆண்டிலே இருந்து அங்கே நடைபெற்ற இனப் படுகொலையைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த இலங்கைத் தமிழ் ஈழ மக்கள் இதுவரையிலே இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் தமிழ்நாட்டிலே பல பகுதிகளிலே பரவி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலட்சத்திற்கு மேற்பட்ட அந்த இலங்கைத் தமிழ் மக்களில் 17 ஆயிரம் பேர் அல்லது 18 ஆயிரம் பேர்தான் தங்களை அகதிகளாகவே பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் இங்குள்ள தமிழர்களோடு ஓரளவுக்குக் கலந்தே விட்டார்கள் என்று சொல்லலாம். அண்மையிலே கூட இந்த 2, 3 மாதங்களிலே ஏறத்தாழ 3 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை அகதிகளாக வந்தவர்களைத் தமிழக அரசு ஆதரித்து அந்தத் துறையினுடைய அமைச்சர், அதிகாரிகள் இவர்கள் எல்லாம்

1990 மார்ச் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

அந்தப் பகுதிகளுக்குச் சென்று அவர்களுடைய தேவைகளை அறிந்து அந்தத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, அகதிகளாக வருகின்றவர்களைப் பற்றி பிரச்சினை இல்லை. ஆனால் அமைதியைக் குலைக்கக்கூடிய அளவுக்கு எந்த நிலைமை ஏற்படுவதையும் தமிழ்நாடு அரசு ஏற்காது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்ட பிறகு இவர்களை ஏன் அனுமதித்தீர்கள் என்று அரசைப் பார்த்து நிச்சயமாகக் கேட்பீர்கள். எனவேதான் ஒரு போராளிக் குழு இங்கே வர, அதைத் தொடர்ந்து இன்னொரு போராளிக் குழு அவர்களைத் தாக்க வர தமிழ்நாடு ஒரு அமளிக் கூடமாக ஆவதை இந்த அரசு விரும்பவில்லை.

மத்திய அரசிலே ஒரு அதிகாரி, வந்தவர்கள் அத்தனை பேரும் அகதிகள்தான்; போராளிகள் அல்ல என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். அந்தக் காலத்திலேயிருந்து எனக்குத் தெரியும், ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்திலும் சரி, இன்று பிரதமர் மாண்புமிகு வி. பி. சிங் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, சில அதிகாரிகள் இந்த இலங்கைப் பிரச்சினையில் சடுகுடு விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

(ஆ) **சட்ட விரோதமான ஆயுதப் பயிற்சி தமிழ் நாட்டில் சில இடங்களில் அளிக்கப்படுவதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.**

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாலைப் பத்திரிகையில் வெளி வந்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான செய்தியைப் பற்றி தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விழைகிறேன். தமிழ்நாட்டில் சட்டவிரோதமாக ஆயுதப் பயிற்சி தரப்படுகிறது என்ற ஒரு குற்றச்சாட்டை பாரதீய ஜனதா கட்சி சார்பில் அவர்கள் தலைவர் ஒருவர் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் சட்ட விரோதமாக ஆயுதப் பயிற்சி முகாம்கள் இயங்கி வருகின்றன. அரசியல் கட்சிகள் உதவியோடு சில அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இந்த ஆயுதப் பயிற்சிக்கு உதவி செய்கிறார்கள். தமிழ் நாட்டில் குழப்பம் ஏற்படுத்துவதற்காக இங்குள்ள இளைஞர்களுக்கு ஆயுதங்கள் கடத்திக்கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று எல்லாம் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது சொன்னது போல், இலங்கையில் இருக்கக்கூடிய போராளிக் குழுக்கள், அங்கே அவர்கள் நடத்துகின்ற சகோதரச் சண்டை அதனுடைய எதிரொலி இங்கே எழுவதற்கும் இங்கேயும் அந்தச் சண்டைகள் தொடர்வதற்கான ஒரு நிலைமை இங்கே இன்றைக்கு ஏற்பட்டு இருக்கின்றது.